வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 552/2020

வழக்கு சாட்சி LW1 /PW1

| பெயர் | குணசேகரன் | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | துரைபாண்டி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 57 |

தேதி 27.02.2025

எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் காவாங்கரை பகுதியில் வசித்து வருகிறேன். சம்பவத்தை பற்றறி எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் 5-6 வருடங்களுக்கு முன்பு என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் செய்து கொடுத்தேன். வழக்கு பற்றிய விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது.

அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க சாட்சி பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அனுமதிஅளிக்கப்பட்டது.

கடந்த 28.09.2018 காலை 10 மணியளவில் எனது கடைக்கு சென்று கொண்டிருந்தபோது ராகேஷ் என்பவரை இரண்டு நபர்கள் வழிமறித்து பணம் கேட்டு மிரட்டினார்கள் என்றால் எனக்கு தெரியாது. அவர்க்ள் தங்களை வீரராகவன், மணிகண்டன் என்றும் தாங்கள் பெரிய ரௌடி என கூறி ராகேஷை அசிங்கமாக பேசி கத்தியைகாட்டி மிரட்டி, மணிகண்டன் ராகேஷ் பாக்கெட்டிலிருந்து 2000 ரூபாயை பிடுங்கிகொண்டார்கள் என்றாலும், புறப்படும்போது சத்தம் கேட்டு பொதுமக்கள் கூடியதும், மணிகண்டன் ராகேஷ் முன்தலையில் கத்தியால் வெட்டினார் என்றால் எனக்கு தெரியாது. அவரை பிடிக்க பொதுமக்கள் முயன்றபோது கத்தியை காட்டி மிரட்டி அங்கு கடையில் வெளியில் இருந்த

கண்ணாடி பாட்டில்களை எடுத்து நான்கு புறமும் வீசியதில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டு பொது அமைதிக்கு பங்கம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்தினை பொறுத்து போலீஸ் விசாரணையின்போது விபரங்களை கூறி தற்போது எதிரிக்கு ஆதரவாக சம்பவத்தை பற்றி தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.